

சென்னை, ஜாபர்கான்பேட்டை, ராகவன் காலனி, மாநகராட்சி விளையாட்டுத் திடலில், நேற்று முன்தினம் (16.01.2025) நடைபெற்ற "சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழாவில் கடலூர் ஸ்ரீ ரேணுகாம்பாள் குழு வின்,இறை நடனம் கலை நிகழ்ச்சி கலைஞர்கள் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்களிடம் வாழ்த்துப் பெற்றனர்.



சென்னை, பெரம்பூர் முரசொலி மாறன் பூங்காவில் நேற்று முன்தினம் (16.01.2025) நடைபெற்ற "சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழாவில் பெரம்பலூர் கலை அருவிக் கலைக்கூடம் குழுவினரின் மயில் காவடியாட்டம் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியினை பொது மக்கள் ஆர்வமுடன் கண்டுகளித்தனர்.

### மருத்துவ, பொறியியல் படிப்பில் உயர்ந்து வரும் அருந்ததியர் மாணவர்கள் எண்ணிக்கை!

# பள்ளத்தில் நிற்போரைப் படிகளில் ஏற்றிய திராவிட மாடல் அரசு!

## ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மதிவேந்தன் பெருமிதம்!

**சென்னை. ஜன. 18 - மருத்துவ, பொறியியல் படிப்பில் அருந்ததியர் மாணவர் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. பள்ளத்தில் நிற்போரைப் படிகளில் ஏற்றிவிடுகிறது திராவிட மாடல் அரசு என்று ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் மரு.மதிவேந்தன் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து அமைச்சர் மரு.மதிவேந்தன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திராவிட இயக்கமும் தமிழ்நாட்டின் சமூக நீதி வரலாறும் பிரிக்க முடியாத உறவை கொண்டவை. நீதிக்கட்சி அரசு வகுப்பு வாரி பிரதிநிதித்துவ அரசாணையை வெளியிட்டு, இந்திய சட்டமன்ற வரலாற்றில் முதன்முதலில் இட ஒதுக்கீடு முறையை அறிமுகப்படுத்தியது. 1928ஆம் ஆண்டு வகுப்புவாரி பிரதிநிதித்துவ சட்டம் நிரந்தரமாக்கப்பட்டது. இதனால், அரசியல், கல்வி, வேலை வாய்ப்பு உரிமை அனைத்துத்தரப்பு மக்களுக்கும் கிடைத்தது. அந்த நீதிக் கட்சியின் நீட்சிதான் தி.மு.க. அரசு. தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின மக்களை கல்வி, பொருளாதார, சமூக, அரசியல் தளத்தில் வலிமையுள்ளவர்களாகவும், வளர்ச்சி அடைந்தவர்களாகவும் உயர்த்த வேண்டும் என்பதுதான் திராவிட இயக்கத்தின் முதன்மை இலட்சியமாகும்.

இந்த இலட்சியப் பயணத்திற்கு பாதை அமைத்து தரும் இடஒதுக்கீட்டு உரிமைகள் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைத்த காலமெல்லாம் உணர்வுப்பூர்வமாக நிறைவேற்றப்பட்டுள்ளன என்பது வரலாறு. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின மக்களின் சமூகநீதி உரிமைகளை நிலைநாட்டும் வகையில் தி.மு.க. அரசு பல்வேறு வகையான இடஒதுக்கீட்டு



சட்டங்களை இயற்றி வரலாறு படைத்துள்ளது.

சமூகத்தின் கடைநிலையில் இருப்பவர்களுக்கும் இடஒதுக்கீட்டின் பயன்கள் கிடைக்கவேண்டும் எனும் சமத்துவ நோக்கோடு பட்டியலின மக்களிடையே மிகவும் பின்தங்கிய நிலையிலிருந்த அருந்ததியர் சமூக மக்களுக்கு 3 விழுக்காடு உள் ஒதுக்கீட்டை 2009ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்த போது வழங்கினார் முத்தமிழறிஞர் கலைஞர். அதுவரையிலும் பட்டியலின மக்களுக்கான ஒதுக்கீட்டில் முழுமையாக பலனை அடையாத சமூகமாக அருந்ததியர் சமூகம் இருந்து வந்தது. இதனை அப்பொழுது ஓய்வுபெற்ற நீதியரசர் ஜனார்த்தனம் தலைமையில் அமைக்கப்பட்ட கமிட்டியும் உறுதிப்படுத்தியிருந்தது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழங்கிய உள் ஒதுக்கீட்டின் பயனால் அதுவரை கல்வி, வேலை வாய்ப்புகளில் உரிய பிரதிநிதித்துவம் பெறாத அருந்ததியர் சமூக மக்கள், இன்றைக்கு உரிய பிரதிநிதித்துவத்தைப் பெற்று வருகிறார்கள் என்பதை சமீபத்தில் வெளியான தரவுகள் உறுதிப்படுத்தியிருக்கின்றன. இதுகுறித்து இன்றைய தி இந்து ஆங்கில நாளிதழில் விரிவான செய்திக்கட்டுரை வெளியாகியுள்ளது.

மருத்துவக் கல்வியில் அருந்ததியர்களின் பிரதிநிதித்துவம் குறித்து வெளிவந்துள்ள தரவுகளின்படி 2018-19ஆம் ஆண்டில் எம்.பி.பி.எஸ் மருத்துவப் படிப்பு சேர்க்கையில் 3,600 இடங்களில் 107 இடங்கள் அருந்ததியர் மாணவர்களுக்கு கிடைத்திருந்தன. திராவிட மாடல் ஆட்சியில் 2023-2024ஆம் ஆண்டு எம்.பி.பி.எஸ் மருத்துவப் படிப்பிற்கான இடங்கள் 6,553 ஆக உயர்த்தப்பட்டு, அதன் மூலம் 193 அருந்ததிய சமூக மாணவர்கள் மருத்துவ கல்லூரிக்கு சென்றிருக்கிறார்கள்.

பல் மருத்துவ படிப்பை பொறுத்தவரை 2018-2019 ஆண்டில் மொத்தமுள்ள 1,080 இடங்களில் அருந்ததியர் சமூக மாணவர்களின் பிரதிநிதித்துவம் வெறும் 16 இடங்களே! அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 3 விழுக்காடு உள் ஒதுக்கீட்டை கூட முழுமையாக பூர்த்தி செய்ய இயலாமல், 1.5 விழுக்காடு அருந்ததியர் சமூக மாணவர்கள் மட்டுமே பல் மருத்துவம் பயின்றார்கள். இந்த அவநிலை 2023-24ஆம் ஆண்டு திராவிட மாடல் ஆட்சியில் மாற்றமடைந்தது. 1,737 பல் மருத்துவ படிப்பிற்கான இடங்களில் அருந்ததியர் பிரிவு மாணவர்கள் 54 பேர் இடம்பெற்றுள்ளனர். அவர்களுக்கான 3 விழுக்காடு பிரதிநிதித்துவம் முழுமையாக கிடைத்தது.

பொறியியல் படிப்புகளைப் பொறுத்தவரை 2009 10 ஆம் ஆண்டில் 1,193 இடங்களை பெற்றிருந்த அருந்ததியர் நிலை, 2023-24 ஆம் ஆண்டில் 3,944 இடங்களை பெற்று உயர்ந்துள்ளது.

ஒட்டு மொத்த பட்டியலின மக்களுக்கான இட ஒதுக்கீட்டில், உள் ஒதுக்கீட்டின் பயனால் அருந்ததியர் பிரிவு மாணவர்கள் பொறியியல் படிப்புகளில் 2016-17 ஆம் ஆண்டு அ.தி.மு.க ஆட்சியில் வெறும் 8.7 விழுக்காடு அளவில்தான் பயன் பெற்று வந்த நிலையில், 2023-24 ஆம் ஆண்டில் 16 விழுக்காடு பயனைப் பெற்றுள்ளனர். இதர பட்டியலின சமூக மக்கள் 84 விழுக்காடு பயனடைந்து வருகின்றனர்.

அருந்ததியர் உள் ஒதுக்கீட்டை கலைஞர் அவர்கள் நிறைவேற்றிய போது, "அருந்ததியர் உள் ஒதுக்கீடு வழங்க மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை" என அன்றைக்கு சொன்னவர் ஜெயலலிதா. உள் ஒதுக்கீடு வழங்கிவிட்டு அமைதியாக இருக்காமல், அதற்கான தடைகளை தகர்த்து சட்டப் போராட்டங்களை உச்ச நீதிமன்றம் வரையில் போராடியது திமுக. அருந்ததியர் உள் ஒதுக்கீடு தொடர்பான தமிழக அரசின் சட்டம் செல்லும் என்று உச்ச நீதிமன்றத்தின் 7 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு கடந்த ஆண்டு உத்தரவிட்டது

2008 நவம்பர் 23ஆம் தேதி கலைஞர் அவர்கள் எழுதிய கவிதையில்,

கழிவுற்ற மலத்தைக் கைகளில் அள்ளி -

கண் கலங்க ஒரு தொழிலாளி;

தலையில் சுமந்து தன் நிலையை நினைத்து

நடக்கும் காட்சி இன்னமும் நடக்குதே நாட்டில்!

தலையில், கையில் மலம் தூக்குவோர் தலைவிதி மாற்றிட

தலையில் தூக்கி சனாத்தனம் அறிக்கையை வைத்துக்கொண்டு ஆடுகின்றேன் நான்

பள்ளத்தில் கிடப்போரைப் படிகளில் ஏற்றி வைக்க; பணி புரிவோம் தொடர்ந்து!

பகுத்தறிவைத் துணை கொண்டு நடந்து!

எனக் குறிப்பிட்டார். அந்த பகுத்தறிவைத் துணைக் கொண்டு ஆட்சி நடத்தும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அரசு, எடுத்த முன்னெடுப்புகளால்தான் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பை உச்ச நீதிமன்றத்தில் பெற்றதோடு, அருந்ததியர் சமூகத்தினர் மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்பில் உரிய பிரதிநிதித்துவத்தையும் பெற்றிருக்கிறார்கள். பள்ளத்தில் கிடப்போரைப் படிகளில் ஏற்றி வைத்திருக்கிறோம் என்ற பெருமிதத்தோடு செயல்படுகிறது திராவிட மாடல் அரசு. சமூக நீதிக்கான இலட்சியப் பயணத்தில் இச்சாதனை ஒரு முக்கிய மைல் கல்.

இவ்வாறு அமைச்சர் மரு.மதிவேந்தன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### பெஞ்சல் புயலால் ஏற்பட்ட பாதிப்புகளை சீர்படுத்துக!

# கண்டச்சிபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தை தாலுகா மருத்துவமனையாக தரம் உயர்த்திடுக!

## சட்டப்பேரவையில் - டாக்டர். இரா. இலட்சுமணன் கோரிக்கை!

சென்னை, ஜன.18-

பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட விழுப்புரம் தொகுதியை சீர்படுத்திட வேண்டும் என்றும், கண்டச்சிபுரத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை தாலுக்கா மருத்துவ மனையாக தரம் உயர்த்திட வேண்டும் என்றும் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் விழுப்புரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். இரா. லட்சுமணன் உரையாற்றுகையில் கோரிக்கை விடுத்தார்.

சட்டப்பேரவையில் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் டாக்டர். இரா. லட்சுமணன் பேசியதாவது:-

தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் உரையை வரவேற்று, முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்றுவரும் மக்கள் நல அரசின் மகத்தான திட்டங்களை வரவேற்று, உரை நிகழ்த்து கின்ற இந்த பொன்னான வாய்ப்பினை எனக்கு வழங்கியிருக்கும் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களுக்கும், கழக இளைஞரணி செயலாளரும், துணை முதல்வருமான எங்கள் இளந்தலைவர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை சமர்ப்பிக்கின்றேன். வனத்துறை அமைச்சர் மற்றும் ஏனைய அமைச்சர் பெருமக்களுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் புத்தாண்டு வாழ்த்து தெரிவித்து, எனது உரையைத் தொடங்குகிறேன்.


**ஆளுநர் உரை நம்பிக்கை உரை!**

இந்த ஆளுநர் உரையை அவையில் வாசிக்க ஒருவர் கொடுத்து வைத்திருக்க வேண்டும். சமத்துவத்திலும், சமதர்மத்திலும், பெண்கள் முன்னேற்றத்திலும் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்ட உரை, இந்த உரை. சமத்துவம் போற்றும் திராவிட மாடல் அரசின் இந்த ஆண்டுக்கான ஆளுநர் உரை மட்டுமல்லாது, ஒவ்வொரு நடவடிக்கையும் பேராசான் டாக்டர் அம்பேத்கர், பேரறிஞர் அண்ணா, நவீன தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கொள்கைகளுக்கு செயல் வடிவம் தருவாக இருப்பதால் இதனை நான் முழு மனதோடு வரவேற்று பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகிறேன். பொது வாழ்க்கைக்கு வந்திருக்கும் நம்முடைய எண்ணமெல்லாம், ஏழைகளையும், எளியோரையும் சுற்றி சுழல வேண்டும். நாம் இயற்றுகின்ற சட்டமெல்லாம் அவர்களை கருணையோடு பார்த்து உரிமையோடு வழிகாட்டுவதாக அமைந்திட வேண்டும். *"Those who have less in life should have more in law"* என்பதை நாம் மறந்துவிட கூடாது. திராவிட மாடல் அரசு வழங்கியிருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் மாதந்தோறும் 1 கோடியே 15 இலட்சம் குடும்பங்களுக்கு வழங்கி வருகிறது. ஒவ்வொரு நாளும் 57 இலட்சம் பெண்கள் மகளிர் விடியல் பயணத் திட்டத்தால் பயன்பெறுகின்றனர்.

**17.53 இலட்சம் சிறார்களுக்கு காலை உணவுத் திட்டம்!**

ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் நீதி கட்சியின் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட பள்ளி மாணவர் மதிய உணவு திட்டம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் ஊட்டச்சத்து உயர்வினைப் பெற்றது. முதலமைச்சர் அவர்களின் மகத்தான காலை உணவு திட்டம், ஒவ்வொரு நாளும் 17.53 இலட்சம் பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவு வழங்குகிறது.

அனைத்து தொழில் முறை படிப்புகளிலும் 7.5 சதவிகித இடஒதுக்கீட்டை



தமிழ்நாடு அரசு நடைமுறைப்படுத்தியிருப்பதால், 35,530 மாணவர்கள் கல்வி கட்டணம், விடுதி மற்றும் போக்குவரத்துக் கட்டணம் உள்ளிட்ட மொத்த கல்வி செலவையும் அரசின் பங்களிப்பாகப் பெற்று பயனடைந்திருக்கின்றார்கள். புதுமை பெண் திட்டத்தில் 4.25 இலட்சம் மாணவிகள் மாதந்தோறும் ரூபாய் ஆயிரம் பெறுகின்றார்கள். தமிழ் புதல்வன் திட்டத்தில் 3.52 இலட்சம் மாணவர்கள் மாதந்தோறும் ரூபாய் ஆயிரம் பெறுகின்றார்கள்.

இந்த ஆண்டு இந்த இரண்டு திட்டங்களும், அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழியில் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு விரிவு படுத்தப்பட்டிருக்கின்றது. இதுவரை நான் குறிப்பிட்ட இந்தத் திட்டங்களுக்கு நிகராக, உலகில் வேறு எந்த நாட்டிலாவது, ஏழை, எளியோர் நலன் காக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா என்பதை ஒரு சவாலாகவே கேட்க விரும்புகிறேன். நம் நாட்டில் மற்ற மாநிலங்கள், தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டங்களைப் பார்த்துதான் தாங்களும் செயல்படுத்தக் கூடிய நிலையை உருவாக்கியிருக்கிறார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்பதை பெருமையுடன், பூரிப்பு டன், கர்வத்துடன் சொல்லி, தலைநிமிர்கிறேன். இந்தத் திட்டங்களால் ஏற்படும் சமுதாய புரட்சிகளை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று அனைவரையும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கத்தியின்றி, இரத்தமின்றி, வறுமைமீது நடத்தப்பட்ட மாபெரும் போர் இது என்பதை சரித்திரம் சொல்லும்.

அரசு மேற்கொள்ளும் நலத் திட்டங்களின் பயன்கள் சமுதாயத்தின் அனைத்து பிரிவினைரையும் சென்றடைய வேண்டுமென்றால், அதற்கு அடிப்படை ஆதாரங்களை dataக்களைத் திரட்ட வேண்டும். எனவே, தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பினை ஒன்றிய அரசு உடனே தொடங்க வேண்டுமென்றும், அத்துடன் இம்முறை சாதிவாரியான கணக்கெடுப்பை நடத்த வேண்டு மென்று நம்முடைய அரசு, ஒன்றிய அரசிடம் கோரிக்கை வைத்திருக்கின்றது. ஆளுநர் உரையிலும் அதுபற்றி விரிவாக பேசப்பட்டிருப்பதை நாம் அனைவரும் வரவேற்க கடமைப்பட்டிருக்கின்றோம். நம் நாட்டில் 14.96 சதவிகிதம் மக்கள், அதாவது சுமார் 25 கோடி மக்கள் பன்முகவறுமைகுறியீட்டின்கீழ் இருக்கி றார்கள்.

நூற்றுக்கு 15 பேர் பன்முக வறுமை குறியீடுகீழ் உள்ள இந்தியாவில், தமிழ்நாட்டில் இந்த எண்ணிக்கை 2.2 சதவிகிதம் மட்டுமே என்பது, நாம் எந்த அளவிற்கு வளர்ச்சியடைந்திருக்கிறோம் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

100 ஆடுகளை கொண்ட இடையன், காணாமல் போன 1 ஆட்டுக் குட்டியை தேடி அலைந்தான் என்கிறார் ஏசுபிரான். அப்படி காணாமல் போன 1 ஆட்டுக் குட்டிக்காக, தன்னையே அர்ப்பணித்தவன் தான் good shepherd என்கிறார் ஏசுநாதர். அப்படி காணாமல் போன ஒரு ஆட்டுக்குட்டியை தேடி ஓடுகின்ற good shepherd நான், என்று ஏசுநாதர் கூறினார் அல்லவா? அதுபோல 97.8 சதவிகித மக்கள் பன்முக வறுமை கூறியீட்டுக்கு மேல் சென்றுவிட்டார்கள் என்று நிம்மதி அடையாமல், காணாமல்போன ஒரு ஆட்டுக் குட்டியைப்போல் உள்ள, 2.2 சதவிகித மக்களையும் வாழ்க்கையில் மேம்படுத்த வேண்டும் என்று ஓயாது உழைக்கும் முதலமைச்சராக நம்முடைய தளபதியார் அவர்கள் திகழ்கிறார் என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறன். (மேசையைத் தட்டும் ஒலி)

**கிராமச் சாலைகளை மேம்படுத்த திட்டம்!**

நலத்திட்ட உதவிகளை மட்டுமே வழங்கிவிட்டு, அதன் மூலமே வளர்ச்சி ஏற்பட்டுவிடும் என்று, நினைக்கின்ற அரசு அல்ல, நமது திராவிட மாடல் அரசு. connectivity, குறிப்பாக கிராம, நகர connectivity என்பது பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படை ஆயிற்றே, எனவே இந்த அரசு 10,000 கி.மீ. சாலைகளை மேம்படுத்த திட்டமிட்டிருக்கிறது. அதற்கென இதுவரை 4,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 9,653 கி.மீ. பணிகள் வெற்றிகரமாக நிறை வேற்றப்பட்டுள்ளன. மிகவும் வறிய 5 இலட்சம் குடும்பங்களை மேம்படுத்த முதலமைச்ச ரின் தாயுமானவர் திட்டம். மாநிலம் முழுவதும் பெண்களுக்கு பாதுகாப்பான, வசதியான, தங்கும் இடங்கள் கிடைப்பதை, உறுதி செய்திட தோழி விடுதிகள் திட்டம். வட சென்னை வளர்ச்சித் திட்டம். சென்னை மெட்ரோ இரயில் இரண்டாம் கட்ட திட்டம். 1,675 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம். குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு கடன் உத்தரவாத திட்டம். ஆயிரக்கணக்கான ஆலயங்களில் திருப்பணிகள் என்று ஏராளமான திட்டங்களை ஒட்டு மொத்த தமிழ்நாட்டு வளர்ச்சிக்காக திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வருவதை ஆளுநர் உரை எடுத்துக்காட்டுகிறது. இத்தனை சிறப்பு வாய்ந்த இந்த ஆளுநர் உரையை வரவேற்று, வழிமொழிவதில் பூரிப்படைகின்றேன்.

முத்தாய்ப்பாக ஆசியாவிலேயே, முதல் முறையாகஅய்யன்திருவள்ளுவர் சிலையையும், துறவி விவேகானந்தர் மண்டபத்தையும் இணைக்கின்ற அற்புதமான கண்ணாடி இழைப் பாலத்தை குமரிக் கடலில் அமைத்திட்ட முதல மைச்சர் அவர்களுக்கு, அங்கு சென்று வரும் பல்லாயிரக் கணக்கான மக்களின் சார்பில் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்து, என்னுடைய விழுப்புரம் சட்டமன்ற தொகுதியின் தேவை களையும், மக்களின் கோரிக்கைகளையும் சிலவற்றை இங்கே சமர்ப்பிக்கின்றேன்.

**பெஞ்சல் புயலினால் பாதிப்பு!**

பெஞ்சல் புயலின் காரணமாக பெய்த அதீத கனமழையால் ஏற்பட்ட, பெரு வெள்ளத்தால் மாவட்டத்தின் முக்கிய நீர்ப்பாசன ஆதாரங்களான பெண்ணையாறு, வடக்கு மலட்டாறு மற்றும் பம்பை வாய்க்கால் ஆகியவை முற்றிலும் சேதமடைந்துள்ளது. பெருமழையின் காரணமாக பொய்யப்பாக்கம் ஏரி, பூவரசங்குப்பம் ஏரி, பஞ்சமாதேவி ஏரி, முத்தாம் பாளையம் ஏரி, கோலியனூர் ஏரி ஆகிய ஏரிகள் உடைந்து, விவசாய விளைநிலங்கள் மிகவும் சேதமடைந்துள்ளது. தளவானூர், அரசமங்கலம், சின்ன கள்ளிப்பட்டு ஆகிய கிராமப் பகுதிகளில் பெண்ணையாற்றின் கரை உடைந்து, வெள்ள நீர் ஊருக்குள் புகுந்து, பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. வடக்கு மலட்டாற்றில் ஏற்பட்ட பெருவெள்ளத்தினால், கொங்ரகொண்டான், திருப்பாச்சனூர், பில்லூர், சேர்ந்தனூர், அரசமங்கலம், பஞ்சமாதேவி, பூவர சங்குப்பம் ஆகிய பகுதிகளில் கரை உடைந்து பெருத்த சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த சேதங்களை செப்பனிட்டுத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**அ.தி.மு.க. ஆட்சியில் உடைந்த தடுப்பணை!**

விழுப்புரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோலியனூர் ஒன்றியத்தில், தளவானூர் கிராமத்தில் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் தென்பெண்ணை ஆற்றில் புதிதாக கட்டப்பட்ட தடுப்பணை கட்டிய சில மாதங்களிலே சேதமடைந்தது. வெள்ள நீர் ஊருக்குள் புகாமல் இருக்க இடதுபுற கரையில் சுமார் 300 மீட்டர் நீளத்திற்கு மேல் தடுப்புச்சுவர் கட்டியும், மீண்டும் உடைந்த தடுப்பணையை புதிதாக கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

விழுப்புரம் நகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்ட சாலாமேடு மற்றும் வழுதரெட்டி ஊராட்சி பகுதிகளில் மழைநீர் வடிகால் வாய்க்கால் இல்லாததால், பெஞ்சல் புயலில் வெள்ளநீர் வெளியேறவில்லை. அதனால் மேற்கண்ட 10 வார்டுகளில் மழைநீர் வடிகால் வாய்க்கால் அமைத்துத் தர ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

விழுப்புரம் நகரம் வி. மருதூர் ஏரி 95.14 ஹெக்டேர் அளவுள்ளது. இதனை தூர்வாரி, ஏரியின் கரைகளை வலுப்படுத்தி, பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நடைபாதையும் மற்றும் விவசாயிகளின் நீர்ப்பாசன வசதி கொண்டதாகவும் செய்து, மருதூர் ஏரியினை புதுப்பிக்க வேண்டும். விழுப்புரம் மையப் பகுதியில் இருக்கும் பழைய நகராட்சி அலுவலகத்தை மறுசீரமைப்பு செய்து டவுன் ஹாலாக மாற்றி பொதுமக்கள், தங்கள் சுபநிகழ்ச்சிகளை செய்வதற்கு ஏதுவாக மாற்றித் தர வேண்டும்.

விழுப்புரம் மாவட்டம், கண்டச்சிபுரத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை தாலுகா மருத்துவமனையாக தரமுயர்த்திட வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி, கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு டாக்டர். இரா.லட்சுமணன் பேசினார்.



காரைக்குடியில் நடைபெற்ற சிவகங்கை மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் சிறப்புரை ஆற்றினார். உடன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், மாவட்ட துணை செயலாளர் த.சேங்கைமாறன், மாநில மாணவரணி இணை செயலாளர் பூரண சங்கீதா ஆகியோர் கலந்து கொண்டனர்.